# தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 3154 குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பதிலுரை... 7 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நீர்வீழ்ச்சிகளில் திடீரென அதிக அளவு உபரி நீர் வெளியேற்றும் போது ஏற்படும் வெள்ளப் பெருக்கு, மலைப்பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவு, கடல் கொந்தளிப்பு மற்றும் அலை சீற்றம் போன்ற பேரிடர்களின் காரணமாக உயிரிழப்பு நிகழ்வதை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள், மீனவர்கள், சுற்றுலா பயணிகளை எச்சரிக்கும் வகையில், அபாய எச்சரிக்கை அறிவிப்பு மற்றும் ஒலி எழுப்பும் 1000 முன்னெச்சரிக்கை அமைப்புகள் ரூ.13.25 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்.

7.பேரிடர் கால மீட்பு நடவடிக்கைகளுக்காக படகு, மீட்பு வாகனம் உள்ளிட்ட நவீன உபகரணங்கள் ரூ.105.36 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

பேரிடர் காலங்களில் குறைந்த கால அளவில் விரைந்து மீட்புப் பணியில் ஈடுபடும் பொருட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை, தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை, சென்னை மாநகரக் காவல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியனவற்றிற்குத் தேவையான படகுகள், மீட்பு வாகனங்கள் மற்றும் நவீன உபகரணங்கள் ரூ.105.36 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

8.காட்டுத் தீ தடுப்பு நடவடிக்கைகளுக்காக வனத்துறை அலுவலர்களுக்கு பயிற்சி மற்றும் தீ தடுப்பு உபகரணங்கள் ரூ.15 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக அண்மைக் காலத்தில் காட்டுத் தீயின் தாக்கம் அதிகரித்து வருவதால், காட்டுத் தீ தடுப்பு முறைகள் குறித்து வனத்துறை அலுவலர்களுக்கும், பொது மக்களுக்கும் பயிற்சி அளிக்கவும் காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்த தேவையான நவீன உபகரணங்கள், காட்டுப் பகுதிகளில் பயணிக்கும் வகையிலான வாகனங்கள், VHF தொலைத்தொடர்பு கருவிகள் வாங்கவும் வனத்துறைக்கு ரூ.15 கோடி வழங்கப்படும்.

9.மீனவர்களுக்கும், மீன்வளத்துறை அலுவலர்களுக்கும் பேரிடர் மீட்பு பயிற்சி ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

பருவநிலை மாற்றம் காரணமாக அடிக்கடி நிகழும் புயல், அதிகனமழை, வெள்ளப் பெருக்கு ஆகியவற்றை திறம்பட எதிர் கொள்ள மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு இன்றியமையாததாகிறது. எனவே, கடலோர மாவட்டங்களில் உள்ள 4,960 மீனவர்களுக்கும், 225 மீன்வளத்துறை அலுவலர்களுக்கும், பேரிடர்களை எதிர்கொள்வதற்கான திறன், தயார் நிலை, தேடல் மற்றும் மீட்பு, முதலுதவி ஆகியவற்றில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக ரூ.1.07 கோடி மதிப்பீட்டில் பயிற்சி அளிக்கப்படும்.

10. தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை வீரர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாநிலத்தில் ஏற்படும் அனைத்து பேரிடர்களின்போதும் தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படை களத்தில் முன்னின்று மீட்புப் பணிகளை திறம்பட மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் அனைத்து வீரர்களுக்கும் பேரிடர் மீட்பு தொடர்பான அடிப்படைப் பயிற்சி, தொழில் நுட்ப பயிற்சி, முதலுதவி பயிற்சி மற்றும் இடிபாடுகள், ஆழ்துளை கிணறு, சுரங்கம் ஆகியவற்றில் சிக்கிக் கொண்டவர்களையும், நீரில் மூழ்கியவர்களையும் மீட்பதற்கான 15 வகையான திறன் மேம்பாட்டு பயிற்சி ரூ.2.10 கோடி மதிப்பீட்டில் வழங்கப்படும்.

11.பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் அமைந்துள்ள 121 கிராமங்களில் வசிக்கும் தன்னார்வலர்களுக்கு முதலுதவி, பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் தொடர்பான பயிற்சி ரூ.6.05 கோடி மதிப்பீட்டில் அளிக்கப்படும்.

கிராம அளவில் பேரிடர்களை கையாளுவதற்காக ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தபட்சம் 50 தன்னார்வலர்களை தேர்வு செய்து, அவர்களுள் 25 நபர்களுக்கு முதலுதவி பயிற்சியும், 25 நபர்களுக்கு பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் தொடர்பான பயிற்சியும் அளிக்கப்படும். பயிற்சி அளிக்கப்பட்ட தன்னார்வலர்களை பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தவும், பேரிடர் அல்லாத காலங்களில் பொது மக்களுக்கு பேரிடர் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில், முதற்கட்டமாக பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ள 121 கிராமங்களில் உள்ள சுமார் 6,000 தன்னார்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.6.05 கோடி மதிப்பீட்டில் முதலுதவி, பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் தொடர்பான பயிற்சி அளிக்கப்படும்.

12.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள குடியிருப்போர் நலச் சங்கங்களில் உள்ள 500 தன்னார்வலர்களுக்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலம் ரூ.2 கோடி மதிப்பீட்டில் பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் தொடர்பான பயிற்சி அளிக்கப்படும்.

டிசம்பர் 2023ல் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் மற்றும் பெரு வெள்ளத்தினால், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். எனவே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், வீட்டு வசதி வாரியம் மற்றும் தனியார் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள மக்களை பாதுகாக்கும் வகையில், குடியிருப்போர் நலச் சங்கங்களில் உள்ள 500 தன்னார்வலர்களை தேர்வு செய்து, பேரிடர் மீட்பு மற்றும் நிவாரணம் தொடர்பான பயிற்சி ரூ.2 கோடி மதிப்பீட்டில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மூலம் அளிக்கப்படும்.

13. பருவ நிலை மாற்றத்தால் தமிழ்நாட்டில் வெப்ப அலையின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வெப்ப அலை தாக்கத்தினை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்படும்.

பருவ நிலை மாற்றம் காரணமாக தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதத்தின் முதல் இரண்டு வாரத்தில் பெரும்பான்மையான இடங்களில் கடுமையான வெப்பமும், வெப்ப அலை வீச்சும் நிலவியது. வெப்ப அலையிலிருந்து பொதுமக்களை பாதுகாக்க பொது இடங்களில் தண்ணீர் பந்தல் அமைப்பது, வெப்ப அலையின் காரணமாக ஏற்படும் உடல்நலக் குறைவுக்கு சிகிச்சை அளிக்க அரசு மருத்துவமனைகளில் தனிப்பிரிவு அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொண்டது. எனவே, மாநில பேரிடர் நிவாரண நிதி விதிமுறைகளின்படி, வெப்ப அலை பாதிப்பிற்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கவும், உரிய நிவாரணம் வழங்கவும் வெப்ப அலை வீச்சினை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்கப்படும்.

பெரம்பலூர், கள்ளக்குறிச்சி மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் பல வருடங்களாக குடியிருந்து வரும் 854 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்படும்.

14.பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், லப்பைக்குடிகாடு பேரூராட்சியைச் சேர்ந்த சில நபர்கள் லப்பைக்குடிகாடு வீட்டு வசதி சங்கம் ஒன்றை ஏற்படுத்தி பதிவு செய்து பெண்ணகோணம் (வடக்கு) கிராமம், புலஎண்.135/6A,6B முதலானவற்றில் 17.75.0 ஹெக்டேர் நிலங்களை லப்பைக்குடிகாடு வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கிரையம் பெற்று, வீட்டு மனைகளாகப் பிரித்து, ஜமாலியா நகர் என்று பெயரிடப்பட்ட பகுதியில் வீடுகட்டி 30 வருடங்களாக குடியிருந்து வரும் மக்களுக்கு மறு நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட பணிகளை மேற்கொண்டு 380 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பட்டாக்கள் வழங்கப்படும்.

15.கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், உளுந்தூர்பேட்டை நகரம் மற்றும் உ.கீரனூர் வருவாய் கிராமங்களில் சர்கார் ஜாகா என வருவாய் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட நிலங்களில் வீடு கட்டி குடியிருந்துவரும் மக்களுக்கு நத்தம் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட பணிகளை மேற்கொண்டு 396 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பட்டாக்கள் வழங்கப்படும்.

16.திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், மேலசீதேவிமங்கலம் கிராமத்தில் நத்தம் என வகைப்படுத்தப்பட்டு நத்தம் நிலவரித்திட்டம் செயல்படுத்தப்படாத புல எண் 104/2Aல், நத்தம் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட பணிகளை மேற்கொண்டு 78 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் பட்டாக்கள் வழங்கப்படும்.

17.இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரத்தில் 40 ஆண்டுகளாக வசித்து வரும் சுமார் 500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீட்டு மனைப் பட்டா வழங்கப்படும்.

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம் மற்றும் நகரம் வார்டு D, பிளாக் 6, T.S.No.40 புலத்தில், சுமார் 500 வீடுகள் கட்டி 40 வருடங்களுக்கு மேலாக வசித்துவரும் வறிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள 500 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீட்டுமனை பட்டா வழங்கப்படும்.

18.திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், ஊர்க்காடு வருவாய் கிராமத்தில் 1800 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், ஊர்க்காடு கிராமம் தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றலும்) சட்டம், 1948ன்கீழ் அரசால் எடுத்துகொள்ளப்பட்டு நிலவரித்திட்டம் 1959ல் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி நிலவரித்திட்டத்தின்போது தயார் செய்யப்பட்ட “அ” பதிவேட்டில் புல எண்:102/1 சர்க்கார் புறம்போக்கு பரப்பு 126.84 ஏக்கர் “ஊர்காடு கிராம நத்தம்” என பதிவு செய்யப்பட்டு மனைவரி பதிவேடு பராமரிக்கப்படும் பகுதியில் வருவாய் பின் தொடர் பணிகளை மேற்கொண்டு 1,800 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

19. வருவாய் நிலை ஆணை 21ன்கீழ் பயனாளிகளுக்கு அளிக்கப்படும் வீட்டு மனை ஒப்படை ஆணைகள் இணைய வழியில் வழங்கப்படும்.

வருவாய் நிலை ஆணை 21ன்கீழ் வீட்டு மனை ஒப்படைகள் மற்றும் பட்டாக்கள் ஆகியன கைப்பிரதி பட்டாக்கள்/ டிநமுனாவாக வழங்கப்பட்டு வருகின்றன. பயனாளிகளுக்கு மேம்பட்ட சேவையை அளிக்கும் பொருட்டு வருவாய் நிலை ஆணை 21ன்கீழ் வழங்கப்படும் வீட்டு மனை ஒப்படை ஆணைகள் இனி வருங்காலங்களில் இணைய வழியில் வழங்கப்படும்.

20.நவீன நில அளவை கருவியைப் பயன்படுத்தி பராமரிப்பு நில அளவை செய்து பொதுமக்களுக்கு பட்டா வழங்கப்படும்.

நவீன நிலஅளவைக் கருவிகளான வகையீட்டு பூகோள நிலைக்கலன் கருவிகளை (Differential Global Positioning System DGPS) தொடர்ந்து இயங்கும் தொடர்பு நிலையங்களுடன் (Continuously Operating Reference Stations CORS) இணைத்து பயன்படுத்தி, புல எல்லைகளை அளவை செய்தும் மற்றும் பட்டா மாறுதலின் போது புலங்களில் உட்பிரிவு நில அளவை செய்தும், பொதுமக்களுக்கு பட்டா வழங்குவதற்கான முன்னோடித் திட்டம், இராணிப்பேட்டை, பெரம்பலூர், விருதுநகர் மற்றும் நாமக்கல் ஆகிய 4 மாவட்டங்களில் 2024-2025 ஆம் நிதி ஆண்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், புல எல்லைகளை விரைவாகவும், துல்லியமாகவும் அளவை செய்து, புவி அமைவிட புள்ளிகளுடன் (Geo coordinates) கூடிய புலப்படத்துடன் நில உரிமைதாரர்களுக்கு பட்டா வழங்கப்படும்.

## மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மண்டல அளவிலான நில அளவைப் பயிற்சி மையங்கள் நிறுவப்படும்!

21. பதிவுத்துறையில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றிதழ் போன்று ஒரு புல எண்ணில் குறிப்பிட்ட காலத்தில் இணைய வழியில் நடந்த பட்டா மாற்ற விவரங்களை அறிக்கையாக பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதி ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பட்டா மாறுதல்கள் இணைய வழியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவுத்துறையில் வழங்கப்படும் வில்லங்கச் சான்றிதழில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களின் விவரங்கள் குறிப்பிடுவது போல, 2016ம் ஆண்டு முதல் குறிப்பிட்ட கால வரையறைக்குள் ரயத்து நிலங்கள் தொடர்பாக நில ஆவணங்களில் மேற்கொள்ளப்பட்ட பட்டா மாற்றங்களின் விவரங்களை பொதுமக்களுக்கு இணையம் வழியே வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

22.பத்திர பதிவின்போது சொத்து விவரங்களை சரிபார்க்க ஏதுவாக, புலப்படத் தரவுகள் பதிவுத்துறைக்கு பகிரப்படும்.

நில ஆவணத்தரவுகள், அதாவது ‘தமிழ் நிலம் தரவுகள்’ பதிவுத்துறையின் ‘STAR’ மென்பொருளுடன் ஏற்கெனவே ஒருங்கிணைக்கப்பட்டு, சிட்டா போன்ற நில ஆவணங்களின் விவரங்கள் பதிவுத்துறைக்கு பகிரப்பட்டுள்ளன. தற்போது, புலப்படத் தரவுகளையும் (FMS) பதிவுத்துறைக்கு பகிர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பதிவுத் துறை அலுவலர்கள், நிலத்தின் எல்லைகளின் அளவுகளை நில ஆவண வரைபடத்துடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னர் பத்திரப் பதிவுகளை மேற்கொள்ள இயலும். இவ்வாறு நிலக்கிரயம் பதிவு செய்யப்படும் முன்னரே புல எல்லைகளின் அளவுகளை சரிபார்ப்பதால் பத்திரங்களில் சொத்து விவரங்களை தெளிவாக குறிப்பிட இயலும்.

23.பட்டா மாற்றம் மற்றும் புல எல்லைகளை அளவீடு செய்தல்

போன்ற சேவைகளை கண்காணித்து அவற்றின் தரத்தினை பேணும்பொருட்டு தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம் அமைக்கப்படும்.

இணையவழி பட்டா மாறுதல், புல எல்லை அளவீடு, வரைபட விற்பனை போன்ற பல சேவைகளை இணையவழியில் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது. இச்சேவைகளை கூர்ந்து கண்காணித்து அவற்றின் தரத்தினை பேணும் பொருட்டு, ‘தரக்கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம்’ ஒன்று நிலஅளவை இணை இயக்குநர் (மத்திய நிலஅளவை அலுவலகம்) தலைமையில் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தில், அமைக்கப்பட்டு, இணையவழிச் சேவைகளின் புள்ளி விவரங்களை கண்காணிக்கும் வகையில், ‘Dashboard’ உருவாக்கப்படும். இதன் மூலம் பொதுமக்களுக்கு இணையவழிச் சேவைகள் விரைவாகவும், செம்மையாகவும் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும்.

24. மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மண்டல அளவிலான நிலஅளவைப் பயிற்சி மையங்கள் நிறுவப்படும்.

நிலஅளவைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மண்டல அளவிலான பயிற்சி நிலையங்கள், ‘தேசிய நில ஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தின் (DILRMP) கீழ்’ தலா ரூ.30 இலட்சம் செலவில் நடப்பு நிதி ஆண்டில் (2024-25) நிறுவப்படும்.

25.தேனி மாவட்டத்தில் டி.கள்ளிப்பட்டி, தென்காசி மாவட்டத்தில் மேலகரம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தில் திப்ரமகாதேவி மற்றும் பேளுக்குறிச்சி ஆகிய கிராமங்களில் சுமார் 3,589 குடும்பங்களுக்கு நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொண்டு மனைப் பட்டா வழங்கப்படும்.

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், தாமரைக்குளம் பிட்1 கிராமம் (உட்கடை) டி.கள்ளிப்பட்டி, தென்காசி மாவட்டம் மற்றும் வட்டம், மேலகரம் கிராமம், நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், திப்ரமகாதேவி கோணங்கிப்ப ட்டி) கிராமம் மற்றும் பேளுக்குறிச்சி ஆகியவைகளில் கிராம நத்தம் என்ற வகைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலங்களில் குடியிருந்து வரும் 3,589 குடும்பங்களுக்கு தமிழ்நாடு நிலஅளவை மற்றும் எல்லைகள் சட்டம் 1923ன்படி, நத்தம் நிலஅளவை மற்றும் அரசாணை எண் 1971, வருவாய்த் துறை, நாள் 14.10.1988ன்படி, நத்தம் நிலவரித்திட்டப் பணிகள் மேற்கொண்டு மனைப் பட்டா வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பதிலுரையாற்றினார்.

---

### தேனி ரயில் நிலையத்திற்கு பொதுமக்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் –

# திண்டுக்கல் - குமுளி தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் புறவழிச் சாலை அமைத்திடுவீர்!

## சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் பெரியகுளம் கே.எஸ்.சரவணக்குமார் கோரிக்கை!

**சென்னை, ஜூன் 26 -**

**சட்டப்பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய பெரியகுளம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார், “தேனி ரயில் நிலையத்திற்கு பொதுமக்கள் எளிதாகச் செல்லும் வகையில், திண்டுக்கல் - குமுளி தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் விதமாக புறவழிச் சாலை அமைத்திடுவீர்!” என கோரிக்கை விடுத்தார்.**

**கே.எஸ். சரவணக்குமார்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என எங்களை வழி நடத்தும் முப்பெரும் தலைவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகின்றேன். தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடி வரும் இந்த தருணத்தில் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தமிழ்நாட்டின் வரலாற்றில் சட்டமன்றம், உள்ளாட்சி, பாராளுமன்றம் என தொடர் வெற்றிகளை குவித்துவரும் சமத்துவ நாயகன், திராவிட மாடல் ஆட்சி நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியாரை வணங்குகின்றேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். தேனி மாவட்ட பொறுப்பு அமைச்சர் ஊரக, உள்ளாட்சித் துறை அமைச்சர் ஐ.பி. அவர்களுக்கு வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எளியோர் குரல் கேட்கும் அரசாக, எண்ணிலடங்கா திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்ற நமது முதலமைச்சர் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின்கீழ் 33 அறிவிப்புகளை கடந்த ஆண்டில் மட்டும் அறிவித்து, அதனை செயலாக்கத்திற்கு கொண்டு வந்திருக்கக்கூடிய சிறப்புமிகு பணியினை நமது திராவிட மாடல் அரசு செய்திருக்கிறது. அதேபோல பெரியகுளம் தொகுதியில், பெரியகுளம் நகரில் அரசு அலுவலர்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்பு கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் மதிய உணவுத் திட்டம் கொண்டு வந்தார். முத்தமிழறிஞர் மதிய உணவுடன் முட்டை வழங்கினார். நமது தலைவரோ காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பிற மாநிலங்கள் மட்டுமல்ல, உலக நாடுகள் பின்பற்றவும், அதனை பாராட்டவும் செய்கின்றன.

அங்கன்வாடி மையங்களில் விறகு அடுப்புமூலம் சமையல் செய்த முறையை மாற்றி, அங்கன்வாடி மையங்களுக்கும் கேஸ் அடுப்பு வழங்கப்பட்டுள்ளது. அங்கன்வாடி சத்துணவுப் பணியாளர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் போதெல்லாம் DA வழங்கியதோடு அவர்கள் ஓய்வு பெறும் வயதை 60 ஆக உயர்த்தி அவர்களது நலனில் அக்கறைக் கொண்டவர் நமது முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாடு அரசினுடைய நிர்வாக வரலாற்றில் மட்டுமல்ல, ஒன்றிய அரசு வரலாற்றிலும் இப்படிப்பட்ட திட்டம் இதுவரை உருவாக்கப்பட்டதில்லை என்று சொல்லும் வகையிலான திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். இந்தத் திட்டமானது எல்லோருக்கும் எல்லாம் என்கிற உயரிய நோக்கைக் கொண்ட திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் கனவு திட்டங்களில் ஒன்றாகும்.



அமைப்புசாரா நலவாரியத்தில் உதவித் தொகை பெறும் குடும்பத்தில் எவரும் உரிமைத் தொகை பெற இயலாது என்ற நிலையை மாற்றி அமைப்புசாரா தொழிலாளர் வாரியம், முதியோர் உதவித் தொகை பெறும் குடும்பத்தில் முதியோர் அல்லாத தகுதி வாய்ந்த பெண்களும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையைப் பெறலாம்.

அதேபோல் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நலனை மேம்படுத்தும் சிறப்பான திட்டம் ரூ.2765 கோடி செலவில் மேற்கொள்ளப்படுகிறது. சமூக நலன் உரிமைத் துறையில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதோடு மக்கள் குடியிருப்புக்கு அருகிலேயே மையங்கள் அமைத்து தடுப்பூசி போடுதல் போன்ற சுகாதார பரிசோதனை, மருத்துவ பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வருடத்திற்கு 2 முறை இந்த மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது. குழந்தைகள் எடை மற்றும் உயரம் மாதந்தோறும் எடுக்கப்பட்டு குழந்தையின் வளர்ச்சி Poshan tracker என்ற செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. இரும்புச் சத்து திரவம் 6 மாதம் முதல் 6 வயது வரையிலும், குடல் பூச்சி நீக்க மருந்துகளும் 6 மாதத்திற்கு ஒரு முறை குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

**குழந்தைகளுக்கான சேவைகள்;** 6 மாதம் முதல் 1 வயது குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு 122 கிராம் வீதம் சத்து மாவும் வாரத்திற்கு 3 முட்டைகள் வீட்டுக்கே எடுத்துச் செல்லும் வகையில் வழங்கப்படுகிறது. ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட், vanilla, strawberry என மணமூட்டப்பட்ட சத்து மாவும், கொழுக்கட்டையும் வழங்கப்படுகிறது. இதுபோன்று தமிழகத்தில் உள்ள குழந்தைகளை தன் பிள்ளைகளை காப்பதுபோல சிந்தித்து, சிந்தித்து திட்டங்களை தீட்டியவர்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

உலகத்தின் உயிரோட்டத்தை கேள்விக்குறியாக்கிய கொரோனா காலகட்டத்தில் மனித இனமே அஞ்சிய போது தன் மக்களுக்காக உயிரையே பணையம் வைத்து கொரோனா உடுப்பு அணிந்து கொரோனா நோயாளிகளுக்கு தைரியமூட்டி தமிழ்நாட்டு மக்களுக்கு நான் இருக்கிறேன் என்று தன்னம்பிக்கை ஊட்டியவர் எங்கள் தாயுமானவர், தலைவர் அவர்கள். கொரோனாவிலிருந்து மீட்டதோடு கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் எவரேனும் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்தும் அவர்கள் அகவை முதிவிற்கு பின் வட்டியுடன் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி குழந்தைகளின் பராமரிப்புத் தொகையாக ரூ. 3,000 வழங்கப்படுகிறது. இலங்கைத் தமிழர்கள் எங்களது தொப்புள் கொடி உறவுகள். அவர்களின் பெயரைச் கூறி பிழைப்பு நடத்தாமல் அவர்களது நலனுக்காக உழைப்பைத் தந்து இலங்கை அகதிகளில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கும் ரூ.3 இலட்சம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**பெண் இனத்திற்கு திராவிட இயக்கம் வழங்கிய அதிகாரக் கொடை!**

இந்தியாவிலேயே மாற்றுத் திறனாளிகள் என்ற சொல்லாடலை சட்டமாக்கிய முத்தமிழறிஞர் வழியில் மாற்றுத் திறனாளிகள் நலனில் எந்தவொரு சமரசமும் செய்துகொள்ளாமல் அவர்களின் கல்வி, வேலைவாய்ப்பில் நமது அரசு துணை நிற்கிறது. அரசு வேலை, உதவித் தொகை மற்றும் கட்டணமின்றி உயர் கல்வி என அனைத்திலும் முத்திரை பதித்து வருகிறது. சொத்தில் சம உரிமை வேண்டுமென்று 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற சுய மரியாதை மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. அதனை 1989 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமாக்கினார். இதுதான் பெண் இனத்திற்கு திராவிட இயக்கம் வழங்கிய மாபெரும் அதிகாரக் கொடை. இதுதான் திராவிட மாடல். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், 1973 ஆம் ஆண்டு வரையில் ஆண்கள் மட்டுமே பங்கெடுத்து வந்த காவல் துறையில் பெண்களுக்கும் பணி பொறுப்புகள் வழங்கப்பட்டன. பெண்களுக்கு அனைத்து அரசுப் பணிகளிலும் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

சிறந்த தந்தை தன் குழந்தைகளிடம் எந்த பாகுபாடும் பார்ப்பதில்லை என்பதைப் போல தலைவர் கலைஞர் அவர்களால் திருநங்கைகள் என பெயர் சூட்டி மூன்றாம் பாலினத்தவர்களில் 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு உதவித் தொகை மாதம் ரூ.1000 ஆக இருந்ததை உயர்த்தி ரூ.1,500 ஆக தந்தவர். அவர்கள் சொந்தமாக தொழில் தொடங்கிட மானியம் வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். எல்லோருக்கும் எல்லாம் என்கிற உயரிய நோக்கத்தோடு நமது திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

எனது பெரியகுளம் தொகுதிக்குட்பட்ட ஒரு சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.

பெரியகுளம் நகராட்சிக்கு பேரிஜம் ஏரியிலிருந்து வரும் நீர் சோத்துப்பாறை அணையின் கீழ்புறத்திலிருந்து நீர் எடுக்கப்படுகிறது. இதில் மலைக் கிராமங்களிலிருந்து வரும் கழிவுநீர் கலக்கிறது. இதனைத் தடுக்கும்விதமாக அணையிலிருந்து 4 கி.மீ.க்கு மேல் தடுப்பணை அமைத்து அதிலிருந்து குழாய்மூலம் குடிநீர் பெற்றால் புவியீர்ப்பு விசையிலேயே மின்சக்தி இல்லாமல் சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்யலாம். எனவே, இத்திட்டத்தை செயல்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாமரைக்குளம் மற்றும் தென்கரைப் பேரூராட்சியில் சுமார் 30,000 பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இரண்டு பேரூராட்சியையும் இணைத்து ஒரு அறிவுசார் மையம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் வட்டத்தில் உள்ள எருமலைநாயக்கன் பட்டி, பொம்மிநாயக்கன் பட்டி, A. வாடிப்பட்டி ஊராட்சிப் பகுதிகளில் நிலத்தடி நீர் மிகவும் மோசமாக உள்ளது. எனவே, மஞ்சளாறு அணையிலிருந்து தெற்கு கால்வாய் மூலம் எருமலைநாயக்கன்பட்டி வரை செல்லும் வாய்க்கால் நீர் மழைக்காலங்களில் உபரியாகச் சென்று ஆற்றில் கலக்கின்றது. அதனை A. வாடிப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி மற்றும் பொம்மிநாயக்கன்பட்டி ஊராட்சி பகுதிகள் பயன்பெறும் வகையில் A. ரெங்கநாதபுரம், சேதுராம் ஊரணி வரை 2 கி.மீ. மண் வாய்க்கால் அமைத்துக் கொடுத்தால் சுமார் 5000 ஏக்கர் தரிசு நிலங்கள் பயன்பெறும். எனவே, மேற்படி வாய்க்காலை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகரில் அமைந்துள்ள மீறு சமுத்திரக் கண்மாயை பொதுமக்கள் பயன்படுத்தும்வகையில் பொழுதுபோக்கு அம்சங்கள், நடைபயிற்சி, படகு சவாரி போன்ற சுற்றுலா அடிப்படைப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட பணியும், நீண்டநாள் கோரிக்கையுமான பெரியகுளம் வட்டம் வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளான பட்டாளம்மன் கோவில் தெரு, பங்காளப்பட்டி அருகிலுள்ள வராக நதி மற்றும் தாமரைக்குளம் பின் பக்க கரையில் அமைந்துள்ள பாரதி நகர் மற்றும் வாரி வாய்க்காலில் நிரந்தரத் தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகரின் மையப் பகுதியில், ராஜ வாய்க்கால் சமீபத்தில் தான் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது. மேலும் ஆக்கிரமிப்பு ஏற்படா வண்ணம் அதை பராமரித்து தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தேனி நகரிலுள்ள இரயில் நிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்கள் எளிதில் வந்து செல்லும் வகையில் இரயில் நிலையத்திலிருந்து திண்டுக்கல்குமுளி தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும் விதமாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும். அதேபோல் தேனி உழவர் சந்தையிலிருந்து திண்டுக்கல் குமுளி புறவழிச் சாலையை இணைக்கும்விதமாக ஒரு புறவழிச்சாலை அமைத்துத் தர வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இதனால் தேனி நகரில் பெருமளவு போக்குவரத்து நெரிசல் குறையும்.

பெரியகுளம் நகராட்சியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்விதமாக போக்குவரத்துக் கழகப் பணிமனை வழியாக திண்டுக்கல் குமுளி தேசிய நெடுஞ்சாலையை இணைக்கும்விதமாக ஒரு புறவழிச் சாலை அமைத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம். தேனி நகரில் சுமார் 1,25,000 மக்கள் வசித்துவருகின்றனர். இது ஒரே வருவாய் கிராமமாக உள்ளது. இதனையும் தேனி பிட் I, பிட் II என்று இரண்டு வருவாய்க் கிராமங்களாக அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். பெரியகுளம் வட்டம், ஜல்லிப்பட்டி ஊராட்சி, கெண்டிகாரன்பட்டிசக்கரப்பட்டி சாலையில் உள்ள தரைப் பாலத்தினை உயர் மட்ட பாலமாக மாற்றி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பெரியகுளம் ஒன்றியம் ஜெயமங்கலம் பஞ்சாயத்திற்குட்பட்ட நடுப்பட்டி முனியாண்டி கோயில் அருகில் வராக நதியின் குறுக்கே பாலம் அமைத்துக் கொடுத்தால் சுமார் 900 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளது. அதிக அளவில் விவசாயிகள் பயன்பெறுவர். எனவே, இப்பாலத்தினை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

“போற்றுவோர் போற்றினாலும், தூற்றுவோர் தூற்றினாலும் என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற கூற்றுக்கிணங்க தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கும் திராவிட மாடல் அரசின் நல்லாட்சியின் நற்சான்றுக்கு 40க்கு 40 அளித்த மக்களோடு சேர்ந்து நானும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகனை வாழ்த்தி வணங்குகிறேன், வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு கே.எஸ். சரவணக்குமார் பேசினார்.